https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சமூக சீர்திருத்தத்தில் குர்ஆனுடைய உவமைகளும் அதன் பங்களிப்பும் ஓர் சுருக்கமான ஆய்வு

# The Role of Quranic Examples in Social Reforming A Brief study

**Mr. Mohamed Ali M A**
Research Scholar, School of Arabic & Islamic Studies,
B.S. Abdur Rahman Crescent Institute of Science & Technology,

**Dr. S. Abdus Samad Nadwi**
Research Supervisor & Associate Professor, School of Arabic and Islamic Studies,
B.S. AbdurRahman Crescent Institute of Science & Technology,
Chennai, Tamil Nadu, India.

## Abstract

Allah Almighty revealed the Quran to His servants to guide them to the straight path. gathering in this holy book various ways to guide people. These methods include eloquent literary style, stories with deep meanings and expressions, and proverbs that play a significant role in understanding and influencing. This article discusses the Quranic proverbs, explaining their wonderful meanings, categories, rhetorical style, great benefits, and profound importance. Proverbs have a fundamental role in all languages. Both Arabs and non-Arabs use proverbs in their speech, each language having its own proverbs, some of which predate Islam, and others appeared during the Islamic era. The Quran contains many proverbs to clarify subtle meanings. unveil hidden truths ،and bring the image closer to the hearts of the listeners. The purposes of the Quranic proverbs are varied, such as knowledge of Allah and His Messenger, distinguishing between truth and falsehood, encouraging goodness and warning against evil, as well as spiritual, ethical, and religious education. Therefore, the righteous predecessors expressed regret over those who do not understand the proverbs, as Allah says: "And these parables We present to the people, but none will understand them except those who know." The proverbs in the Quran are diverse, and their impact is connected to the feelings of human souls; they may stir the hearts of the pure, while they might be rejected by the hearts of the sick.

This research addresses the Quranic proverbs that have had a significant impact on people's hearts. Quranic proverbs are an effective rhetorical tool in societal reform, as they contribute to enhancing religious and ethical values, and encourage cooperation and justice among individuals. By motivating personal growth and guiding individuals to adhere to higher values, these proverbs help build a community characterized by peace and social solidarity. The research methodology in this thesis is descriptive, and its results aim to highlight the contributions of Quranic proverbs to the reform of Islamic society.

**Key Words:** Quranic parables, Main Role, Guidance, Influence, Social Reforming.

### ஆய்வுச்சுருக்கம்

அல்லாஹ் தன் அடியார்களை நேரான வழியில் நடத்துவதற்காக தன் வேதமான திருக்குர்ஆனை அருளினான். இந்த புனித நூலில் மக்களை வழிநடத்த தேவையான பல்வேறு வழிகளை ஒன்றிணைத்துள்ளான். இந்த முறைகளில் சொல்வன்மை மிக்க இலக்கிய பாணி, ஆழமான அர்த்தங்களும் வெளிப்பாடுகளும் கொண்ட வரலாறுகள், மற்றும் புரிதலுக்கும் தாக்கத்திற்கும் முக்கிய பங்கு வகிக்கும் உவமைகள் ஆகியவை அடங்கும்.

இந்த கட்டுரை திருக்குர்ஆனின் உவமைகள் பற்றி விவரிக்கிறது, அவற்றின் அற்புதமான அர்த்தங்கள், வகைகள், அலங்கார இலக்கிய பாணி, பெரும் பலன்கள் மற்றும் ஆழமான முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்குகிறது. உவமைகள் அனைத்து மொழிகளிலும் அடிப்படை பங்கு வகிக்கின்றன. அரபுகளும் அரபு அல்லாதவர்களும் தங்கள் பேச்சில் உவமைகள் மற்றும் பழமொழிகளைப் பயன் படுத்துகின்றனர், ஒவ்வொரு மொழிக்கும் அதன் சொந்த பழமொழிகள் உள்ளன.

திருக்குர்ஆன் நுட்பமான அர்த்தங்களைத் தெளிவுபடுத்த,மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்த, மற்றும் கேட்பவர்களின் இதயங்களுக்கு நெருக்கமான பிம்பத்தைக் கொண்டுவர பல உவமைககளைக் கொண்டு ள்ளது. திருக்குர்ஆனின் உவமைகளின் நோக்கங்கள் பல்வேறு வகையானவை, அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அறிதல், உண்மை மற்றும் பொய் ஆகிய வற்றை வேறுபடுத்துதல், நன்மையை ஊக்கு வித்தல் மற்றும் தீமையிலிருந்து எச்சரித்தல், அதே போல் ஆன்மிக நெறிமுறை மற்றும் மதக் கல்வி போன்றவை. எனவே, அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: "இந்த உவமை களை நாம் மக்களுக்கு முன் வைக்கிறோம், ஆனால் அறிந்தவர்களைத் தவிர வேறு யாரும் அவற்றைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்." திருக்குர்ஆனில் உள்ள உவமைகள் பல்வேறு வகையானவை, மற்றும் அவற்றின் தாக்கம் மனித ஆத்மாக்களின் உணர்வுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது; அவை தூய்மையானவர்களின் இதயங்களைக் கிளறிவிடக்கூடும், அதேநேரத்தில் நோயுற்ற வர்களின் இதயங்களால் நிராகரிக்கப் படலாம்.

இந்த ஆராய்ச்சி மக்களின் இதயங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய திருக்குர்ஆனின் உவமைகளைக் கையாள் கிறது. திருக்குர்ஆனின் பழமொழிகள் சமூக சீர்திருத்தத்தில் ஒரு பயனுள்ள அலங்கார கருவியாகும், ஏனெனில் அவை மத மற்றும் நெறிமுறை மதிப்புகளை மேம்படுத்தவும், தனிநபர்களுக்கு இடையே சகோதரத்துவ ஒத்துழைப்பு மற்றும் நீதியை ஊக்குவிக்கவும் பங்களிக்கின்றன. தனிப்பட்ட வளர்ச்சியைத் தூண்டுவதன் மூலம் மற்றும் உயர்ந்த மதிப்புகளைக் கடைபிடிக்க தனிநபர்களை வழிநடத்துவதன் மூலம், இந்த உவமைகள் அமைதி மற்றும் ஒற்றுமை ஆகியவற்றால் ஒரு சமூகத்தை உருவாக்க உதவுகின்றன.

இந்த ஆய்வறிக்கையில் ஆராய்ச்சி விளக்க முறைமை கையாளப்பட்டுள்ளது, மற்றும் அதன் முடிவுகள் சமூக சீர்திருத்தத்திற்கு திருக்குர்ஆனின் உவமைகளின் பங்களிப்பு களை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


**முக்கிய வார்த்தைகள்:** குர்ஆனிய உவமைகள், முக்கிய பங்களிப்பு, தாக்கமும் விளைவும், வழிகாட்டுதல், சமூக சீர்திருத்தம்.

### முன்னுரை

எல்லாம் வல்ல இறைவன் தன் தெளிவான மற்றும் உறுதியான விளக்கத்துடன் உவமைகளின் முக்கியத்துவத்தை குர்ஆனில் எடுத்துயம்புகிறான். எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான் "மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது: எனவே, அதனைச் செவிதாழ்த்திக் கேளுங்கள்". இன்னும் அவன் கூறுகிறான், "அல்லாஹ் ஓர் ஊரை (அவர்களுக்கு) உதாரணம் கூறுகிறான்". இன்னும் அவன் கூறுகிறான், "மனிதர்களுக்கு - அவர்கள் படிப்பினை பெறுவதற்காக - அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான்". இன்னும் அவன் கூறுகிறான், "அல்லாஹ் (இருவரை) உதாரணம் கூறுகிறான்: பிறிதொருவனுக்கு உடைமையாக்கப்பட்ட எந்தப் பொருளின் மீதும் (அதிகார) உரிமை பெறாத ஓர் அடிமை; மற்றொருவனோ நம்மிடமிருந்து

அவனுக்கு நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களும் கொடுத்திருக்கிறோம்; அவனும், அவற்றிலிருந்து இரகசியமாகவும் பகிரங்கமாகவும் (நம் வழியில்) செலவு செய்கின்றான்; இவர்கள் (இருவரும்) சமமாவார்களா? எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே; என்றாலும், அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்வ தில்லை". இன்னும் அவன் கூறுகிறான், "நிச்சயமாக அல்லாஹ் கொசுவையோ, அதிலும் (அற்பத்தில்) மேற்பட்டதையோ உதாரணம் கூறுவதில் வெட்கப்படமாட் டான்". இவ்வாறு, குர்ஆனிய வசனங்கள் நன்மை பயக்கும் உவமைகளின் பலாபலன் களையும், சரியான பயன்பாட்டின் மூலம் அவற்றின் மெய்யான ஞானத்தையும், சமூகத் தில் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் மகத்தான அறிவுரைகளையும், பயன்பாடுகளையும் தெளிவாக்குகின்றன.

உவமைகள் பல்வேறு மொழிகளில் பேச்சு முறைகளாக பயன்படுத்தப்படுகின்றன. சில சமயம் பொருத்தமான சொற்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால், அவை மனித சமூகத்தில் எளிதாக பரவுகின்றன. இவை சொற்களின் சிறந்த மற்றும் உன்னதமான வடிவமாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், இவை சில சொற்களால் ஆனவையாக இருந்தாலும், நிறைய அர்த்தங்களைத் தன்னுள் கொண்டுள்ளன. பேசுவோருக்கு எளிதானவையாக இருந்தாலும், பெரும் பயனையும் ஆழமான தாக்கத்தையும் வழங்குகின்றன.

புனித குர்ஆன் முழு மனிதகுலத்திற்கும் வழிகாட்டும் மூலமாகவும், ஞானத்தின் நீரூற்றாகவும், போதனையின் ஆதாரமாகவும் விளங்குகிறது. இது தனிநபர்கள் மற்றும் சமூகங்களை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றுகிறது. குர்ஆன் தனது செய்தியைப் பரப்பப் பயன்படுத்தும் முக்கியமான கருவி களில் குர்ஆனிய உவமைகள் முதன்மை யானவை. இந்த உவமைகள் சுருக்கமாக இருந்தாலும், அவற்றினுள் ஆழமான அர்த்தங்கள் அடங்கியுள்ளன. மேலும் இவை மக்களின் நெறிமுறை மற்றும் மார்க்க விழுமியங்களை வளர்ப்பதற்கு உதவிபுரிவ தோடு, சமூகத்தை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

குர்ஆனிய உவமைகள் வெறும் சொற்களின் தொகுப்பு மட்டுமல்ல, அவை நீதி, ஒத்துழைப்பு, கருணை, பொறுப்பு போன்ற முக்கியமான கருத்துகளைக் கொண்ட இறை ஞானத்தின் வடிவமாகும். இந்த உவமைகள் மூலம் தன்னம்பிக்கை வளர்ப்பது, சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவது, உண்மை, இரக்கம் போன்ற நற்பண்புகளை வளர்ப்பது ஆகிய முக்கியமான பாடங்களை குர்ஆன் கற்பிக்கிறது.

இந்த ஆய்வானது குர்ஆனிய உவமைகளின் மூலம் சமூக சீர்திருத்தத்தில் உள்ள முக்கியத்துவத்தையும், தனிநபர்கள் தங்கள் பொறுப்புகளைப் புரிந்துகொள்வதற்கும் நேர்மறையான மாற்றத்தைத் தூண்டுவதற்கும் இவை எவ்வாறு ஊன்றுகோலாய் உதவுகின் றன என்பதையும் பற்றி ஆராய்கிறது. இந்த உவமைகளை ஆழமாகப் படிப்பதன் மூலம், தனிநபர்களின் நடத்தை மற்றும் சமூக ஒற்றுமையில் இவற்றின் ஆழமான தாக்கத்தை நாம் காணலாம்.

குர்ஆனிய உவமைகள் சமூக சீர்திருத்தத்தி ற்கு மிகுந்த உதவியாக இருக்கின்றன. இவை சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களிலும் நெறிமுறைப் பாடங்களை ஊக்குவிக்கின்றன. சமூகத்தை மேம்படுத்தும் குர்ஆனின் சில உவமைகளை இங்கே காணலாம்.

## நற்சொல்லின் பலனும் தீச்சொல்லின் விளைவும்

எல்லாம் வல்ல அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: "(நபியே!) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது ஒரு நன்மரத்தைப் போன்றது; அதனுடைய வேர் (பூமியில் ஆழமாகப்) பதிந்ததாகவும், அதன் கிளைகள் வானளாவியும் இருக்கிறது. அது, தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னு டைய கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது; மனிதர்களுக்கு - அவர்கள் படிப்பினை பெறுவதற்காக - அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான். கெட்ட வாக்கியத்திற்கு உதாரணம், கெட்ட மரமாகும்; பூமியின் மேல் பாகத்திலிருந்தும் (அதன் வேர்) பிடுங்கப்பட்டிருக்கும்; அதற்கு நிலைத்து நிற்கும் தன்மையும் இல்லை".

இந்த வசனம் நற்சொல் (நல்ல வார்த்தை) மற்றும் தீச்சொல் (தீய வார்த்தை) இடையேயான தெளிவான வேறுபாட்டை உணர்த்துகிறது. நற்சொல் நன்மை தரும் நற்பலன்களுக்கு வழிவகுக்கும், அதேநேரம் தீச்சொல் தீங்கையே விளைவிக்கும். இது தனிநபர்களுக்கும் சமூகத்திற்கும் ஒரு எச்சரிக்கையாக அமைகிறது - தங்கள் சொற்களின் தாக்கத்தைப் பற்றி சிந்திக்கவும், பேசும்போது மிகுந்த கவனம் செலுத்தவும் அல்லாஹ் மனிதர்களுக்கு இந்த உவமையை எடுத்துக்காட்டியுள்ளான், மக்கள் தங்கள் வாழ்க்கையில் நல்ல சொற்களும் தீய சொற்களும் ஏற்படுத்தும் விளைவுகளை ஆழமாக சிந்திக்கவேண்டும் என்பதற்காக. மேலும், நன்மைக்கும் உறுதியான நற்பலன் களுக்கும் வழிவகுக்கும் சொற்களைத் தேர்ந் தெடுக்கும்படி மக்களை ஊக்குவிக்கிறான்.

தீய சொல் மனிதர்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்காது, நற்பலன்களைத் தராது. மாறாக, அது அழிவையும் குழப்பத்தையும் மட்டுமே விளைவிக்கும். தீய மரம் பூமியில் உறுதியாக வேரூன்றாதது போல, தீய சொல்லுக்கும் நிலையான அல்லது பயனுள்ள தாக்கம் எதுவும் இல்லை. ஆனால் நல்ல சொல் வலிமை, உண்மை ஆகியவற்றால் சிறப்புற்றது. இது தனிநபர் மற்றும் சமூகத்தின் மீது நிலையான, நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நல்ல மரம் காலப்போக்கில் வளர்ந்து செழிப்பதைப் போல, நல்ல சொல்லின் தாக்கமும் நீண்ட காலம் நிலைத்திருக்கும்.

பெரும்பாலான திருக்குர்ஆன் விளக்கவுரை யாளர்கள் 'நற்சொல்' என்பதை 'தவ்ஹீதின் சொல்' அதாவது இறை ஒருமைத்துவத்தின் அடிப்படை சொல்லான 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்ற சாட்சியத்தைக் குறிக்கிறார்கள். இன்னும் இவ்வார்த்தைக்குள் குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ் (துதித்தல்), தஹ்மீத் (புகழுரைத்தல்), இஸ்திக்ஃபார் (பாவமன்னி ப்பு வேண்டுதல்), தவ்பா (மனந்திரும்புதல்), நன்மையின் பால் அழைப்பது, சமூக சீர்திருத்தத்திற்கான அழைப்புகள் ஆகிய எல்லா நற்கருத்துகளும் நற்சொற்களாகும்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் களின் கூற்றும் இதை உறுதி படுத்துகிறது: “குர்ஆனை ஓதுகின்ற ஒரு முஃமினின் உதாரணம், நார்த்தங்காய் பழத்தைப் போன்றதாகும் அதன் மணமும் நறுமணம் உடையது. அதன் சுவையும் நல்லது. குர்ஆனை ஓதாத ஒரு முஃமினின் உதாரணம், பேரீத்தம் பழத்தைப் போன்றதாகும். அதற்கு நறுமணம் கிடையாது. ஆனால் அதன் சுவை இனிப்பானதாகும். குர்ஆனை ஓதுகின்ற நயவஞ்சகனின் உதாரணம், ஒரு பூவைப் போன்றதாகும். அதற்கு நறுமணம் உண்டு. ஆனால் அதன் சுவை கசப்பானது. குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் உதாரணம், குமட்டிக் காய் போன்றதாகும். அதற்கு நறுமணமும் கிடையாது. அதன் சுவையும் கசப்பானது” என்று நபி(ஸல்) கூறினார்கள்”.

வள்ளுவன் இயற்றிய திருக்குறளும் நல்ல வார்த்தைகளையே பயன்படுத்த தூண்டுகிறது.

**“இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று”.**

இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

## இறை வழியில் தர்மம் செய்தால் 700 மடங்கு நன்மை

எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்: “இறை வழியில் தங்கள் செல்வத்தைச் செலவிடுபவர்களுக்கு உவமையாவது: ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றது; அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (இதை மேலும்) பன்மடங்காக்குகின்றான்; இன்னும், அல்லாஹ் விசாலமான (கொடையுடைய) வன், யாவற்றையும் நன்கறிபவன்”.

இறை வழியில் செலவு செய்வது என்பது அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானதும் குர்ஆன் மற்றும் நபிமொழி மூலம் பாராட்டப்பட்ட மகத்தான நற்செயல்களில் ஒன்றாகும். இதற்கு பல மகிமைகளும் நற்கூலியும் உண்டு.

இறை வழியில் தர்மம் செய்வது ஏழைகள் மற்றும் தேவைப்படுபவர்களின் வாழ்க்கையை

மேம்படுத்துகிறது, மேலும் இது சமூக ஒற்றுமை மற்றும் மனிதநேய மதிப்புகளை வலுப்படுத்துகிறது. அல்லாஹ் (ஸுப்ஹானஹு வ தஆலா) இத்தகைய நற்செயல்களின் நற்கூலியை இவ்வுலகிலும் மறுவுலகிலும் பல மடங்காக அதிகரிக்கச் செய்வான். இந்த வசனம், அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பதின் மேன்மை மற்றும் அதன் நன்மைகளை ஒரு உதாரண த்தின் மூலம் விளக்குகிறது. அதாவது "அல்லாஹ்வின் வழியில் தங்கள் செல்வத்தை செலவிடுவோரின் தர்மம், ஒரு விதைக்கு ஒப்பாகும்." இந்த உவமையில், தர்மம் செய்பவர் ஒரு விவசாயியைப் போன்றவர். அவரது தர்மம் (ஸதக்கா) என்பது நல்ல விதையைப் போன்றது. அல்லாஹ் அதைப் பெருக்கி, ஒரு விதையிலிருந்து 700 மடங்கு அல்லது அதற்கும் மேலான பலனை அளிக்கிறான். இதன் விளக்கமானது ஒரு விதை 7 கதிர்களை முளைப்பிக்கிறது, ஒவ்வொரு கதிரிலும் 100 தானியங்கள் என 700 தானியங்கள் இருப்பதை போன்று இறை வழியில் தர்மம் செய்வதால் 700 நன்மை கிடைக்கிறது.

மேலும் "அல்லாஹ் கூறுகிறான்: 'அல்லாஹ் தான் நாடியவருக்கு (செலவின் பலனை) பல மடங்காக அதிகரிக்கிறான்'. அதாவது ஒரு திறமையான விவசாயி தனது விளைச்சல் நிலத்தில் நல்ல முறையில் அரும்பாடு பட்டு விவசாயம் செய்தால் அவர் எதிர்பார்ததை விட அதிக மகசூல் கிடைப்பதை போன்று தர்மம் செய்பவர் நல்ல நோக்கத்துடன் தூய்மையான வருவாய் மூலம் உண்மையான தேவையுள்ளோருக்கு செலவழித்தால் அவரது நற்கூலி எழுநூறைவிடவும் பல மடங்கு பெருகும்."

## நிலைத்திருக்கும் சத்தியமும், அழிந்துவிடும் அசத்தியமும்

எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்: "அவன் வானத்திலிருந்து தண்ணீரை இறக்கினான்; அப்பால் ஓடைகள் அவற்றின் அளவுக்குத் தக்கபடி (நீரைக்கொண்டு) ஓடுகின்றன. அவ்வெள்ளம் நுரையை மேலே சுமந்துசெல்கிறது. (இவ்வாறே) ஆபரணமோ அல்லது (வேறு) சாமான் செய்யவோ (உலோகங்களை) நெருப்பில் வைத்து அவர்கள் உருக்கும்போதும் அதைப்போல் நுரை உண்டாகின்றது. இவ்வாறு சத்தியத்தி ற்கும், அசத்தியத்திற்கும் அல்லாஹ் (உவமை) கூறுகிறான். எனவே, நுரை (பலனற்றதாக இருப்பதால்) அழிந்துபோய்விடுகிறது. ஆனால், மனிதர்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதோ, பூமியில் தங்கிவிடுகிறது. இவ்வாறே, அல்லாஹ் உவமைகளைக் கூறுகிறான்." வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றபோது அதன் மேல் பகுதியில் காணப்படும் நுரைகளைக் கொண்டு சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் உதாரணம் சொல்லுகிறான். மேல் பகுதியில் காணப்படும் நுரைகளானது அது நிலைத்து மிருக்காது மக்களுக்கு எந்த பயனும் கொடுக்காது அதேப்போன்று தான் அசத்தியமும் மக்களுக்கு பலன் தராது. ஆனால் நுரைகளுக்கு கீழே ஓடுகின்ற தண்ணீரோ பூமியிலே நிலைத்திருந்து அனைத்திற்கும் பலன் கொடுப்பதைப் போன்று சத்தியமும் நிலைத்திருந்து மக்களு க்கு பலன் தருகிறது. இந்த உதாரணத்தை வாழ்க்கையின் பல அம்சங்களுக்கு பொருத் தலாம்: ஹராம் (தடை செய்யப்பட்ட) பணம் – விரைவில் கரைந்துவிடும், எந்த நன்மையும் பாதிப்பும் இல்லாமல். ஹலால் (அனுமதிக்கப் பட்ட) பணம்–நீடித்து, அதை செலவழிப் பவருக்கும் சமூகத்திற்கும் நீடித்த நன்மை களை தரும்.

"இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாக இப்னு ஜரீர் மற்றும் இப்னு அபீ ஹாதிம் ஆகியோர் தங்கள் தஃப்சீர் நூல்களில் பதிவு செய்துள்ளனர்: இது அல்லாஹ் முன்மாதிரி யாகக் காட்டிய ஹக்க் (உண்மை) மற்றும் பாத்தில் (பொய்) ஆகியவற்றுக்கிடையேயான ஒப்புமை. அவன் கூறுகிறான்: வெள்ளம் பள்ளத்தாக்கில் உள்ள எல்லா பொருட் களையும் (உலர்ந்த குச்சிகள், குப்பைகள், தீயில் எரிக்கப்படும் உலோகங்கள் போன்ற வை) அடித்துச் செல்கிறது, அதேப்போன்று உண்மை எல்லா பொய்களையும் அழித்து விடுகிறது. அவ்வாறே நெருப்பில் உருக்கும் பொருட்களில் தங்கம், வெள்ளி, அணிகலன் கள், செம்பு மற்றும் இரும்பு ஆகியவை அடங்கும். இதில் செம்பு மற்றும் இரும்பில் கசடு (அசுத்தம்) இருக்கும். இந்த கசடுகள் நுரைகளுக்கு ஒப்பானவை, யாருக்கும் பலனளிக்காது. ஆனால் தங்கம் & வெள்ளி தூய்மையானவை, கசடு இல்லாதவை இது

உண்மையின் சின்னம். இது தண்ணீரைப் போன்று மக்களுக்கு பலன் தரக்கூடியது. இவ்வாறே மனிதர்களுக்கும் அவர்கள் செய்கின்ற நல்ல செயல்கள் நீடித்து நிலை பெறுகிறது. தீய செயல்கள் அழிந்து விடுகிறது. இந்த வழிகாட்டுதலும் உண்மை யும் அல்லாஹ்விடமிருந்து வந்தவை. உண்மை யுடன் நடப்பவர் அதன் பலனைப் பெறுவார். பூமியில் மக்களுக்கு நன்மை பயக்கும் விஷயங்கள் மட்டுமே நிலைத்து நிற்கும். இரும்பை நெருப்பில் இட்டுச் சுத்திகரிக்காமல் கத்தி அல்லது வாளாக மாற்ற முடியாது. நெருப்பு அதன் கசட்டை அழித்தபின் மட்டுமே பயனுள்ள பொருளாக மாறும். அதுபோல பொய்மையும் அழிந்து போகும். மறுமை நாளில் மனிதர்கள் எழுப்பப்பட்டு அவர்களின் செயல்கள் முன் வைக்கப்படும் போது, பொய்மை அழிக்கப் பட்டு, உண்மையாளர்கள் உண்மையின் பலனை அனுபவிப்பார்கள்."

"அல்லாஹ் இதை உண்மை மற்றும் பொய் ஆகியவற்றுக்கு ஒரு உதாரணமாக ஆக்கியு ள்ளான். அதாவது, பொய் நுரையைப் போன்று அழிந்து போகும்; உண்மை தண்ணீர் மற்றும் உலோகம் போன்று இதயங்களில் நிலைத்து நிற்கும். இது முஃமின்களுக்கு ஒரு ஆறுதலாகவும் கூறப் படுகிறது. அதாவது, இணைவைப்பாளர் களின் விஷயம், நுரையைப் போன்று தோற்றத்தில் ஏதோ ஒன்று போல் தெரிந்தாலும், உண்மையில் அதற்கு எந்த அடிப்படையும் இல்லை. முஃமின்களின் விஷயம், தண்ணீர் போன்று அதன் இடத்தில் நிலைத்து நிற்கும்; அது நிலைத்து நிற்பதும் உறுதியானதுமாகும்."

### உலக வாழ்வு நிரந்தரமில்லை - ஒரு உதாரணம்

எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்: "மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம் - அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! "அது நாம் வானத்திலிருந்து இறக்கிவைத்த நீரைப் போலிருக்கிறது; பூமியிலுள்ள தாவரங்கள் அதனுடன் கலந்(து செழி)த்தன; ஆனால், அவை காய்ந்து பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டுபோய்விடுகிறது; மேலும், எல்லாப் பொருட்களின் மீதும் அல்லாஹ் ஆற்றலு டையவனாக இருக்கின்றான்."

தூய்மையாளன் அல்லாஹ் இந்த உலக வாழ்க்கையை ஒரு உதாரணத்துடன் விளக்கு கிறான்: வானிலிருந்து பெய்யும் மழைநீர் போன்றது. அது பூமியில் கலந்து, பயிர்களை வளர்த்து, பின்பு உலர்ந்து போகும்; காற்றால் பறக்கும் பதராக மாறிவிடும். அதாவது, இந்த உலகின் சுகபோகங்களும் அலங்காரங்களும் நிலையாக இருக்காது.

இந்த வசனம், அல்லாஹ்வின் முழுமையான ஆற்றலை நினைவூட்டுகிறது. அவனே உயிரை யும் மரணத்தையும் படைக்கிறான்; கொடுக் கிறான், பறிக்கிறான்; ஒரு கணத்தில் உலகின் நிலையை மாற்றுகிறான். எல்லாம் அவனு டைய சித்தப்படியே நடக்கிறது.

இந்த வசனம் உணர்த்துவது என்னவென் றால், இந்த உலகம் நிரந்தரமான இடமல்ல அல்லது இறை விசுவாசிகளின் இறுதி இலக்கும் அல்ல. உலகில் உள்ள எதுவும், எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அழிந்து போகும். நிலைத்து நிற்பவை நல்ல செயல்கள் மட்டுமே அதுவே சமூகத்திற்கு நன்மை பயப்பதாகும்.

### ஞானிகள் கூறியதாவது

"தூய்மையாளன் அல்லாஹ் இந்த உலகத்தை தண்ணீருக்கு உவமை கூறியிருக்கிறான். ஏனென்றால்: தண்ணீர் ஒரு இடத்தில் நிலைக்காததுபோல இந்த உலகமும் ஒரே நிலையில் இருக்காது, தண்ணீரின் நிலை மாறிக்கொண்டிருப்பதை போல இந்த உலகமும் மாறிக்கொண்டே இருக்கும். தண்ணீர் நிலைத்து நில்லாது, போய்விடும் – அதுபோல இந்த உலகமும் அழிந்துபோகும். தண்ணீரில் நுழைந்தவர் நனையாமல் இருக்க முடியாது – அதுபோல இந்த உலகத்தில் நுழைந்தவர் அதன் சோதனைகள் மற்றும் தீங்குகளிலிருந்து தப்பிக்க முடியாது. தண்ணீர் அளவாக இருந்தால் பயிர்களுக்கு நல்லது; அதிகமானால் அழிவு – அதுபோல இந்த உலகம் தேவையான அளவு நம் வாழ்க்கையில் இருந்தால் நன்மை, அதிக மானால் கேடு. ஒரு மனிதர் நபிகளாரிடம் கேட்டார்: 'இறைத்தூதரே! நான் வெற்றியா ளர்களில் ஒருவனாக இருக்க விரும்புகிறேன்.' அதற்கு நபி (ஸல்)அவர்கள் சொன்னார்கள்:

‘உலகத்தை விட்டுவிடு, தேங்கி நிற்கும் தண்ணீரைப் போல (அதிகம் இல்லாமல்) தேவையான அளவு மட்டும் எடுத்துக்கொள். சிறிதளவே போதுமானது, அதிகமாக வேண்டும் என்பது ஆசையைத் தூண்டும்.’ எனவே உலகின் மீது பற்று இன்றி தேவையான பங்களிப்புடன் வாழ்வதே சிறந்தது.”

### தனது மனோ இட்சையை பின்பற்று வோருக்கான எச்சரிக்கை

எல்லாம் வல்ல இறைவன் கூறுகிறான்: “(நபியே!) நீர் அவர்களுக்கு ஒருவனுடைய வரலாற்றை ஓதிக்காட்டுவீராக! அவனுக்கு நாம் நம் அத்தாட்சிகளைக் கொடுத்திருந் தோம்; எனினும், அவன் அவற்றை விட்டு நழுவி விட்டான்; அப்போது அவனை ஷைத்தான் பின் தொடர்ந்தான்; அதனால், அவன் வழிதவறியவர்களில் ஒருவனாகி விட்டான். நாம் நாடியிருந்தால், அவற்றைக் கொண்டு அவனை உயர்த்தியிருப்போம்; ஆனால், அவன் (இந்த) உலகத்தின் பக்கம் சாய்ந்து தன் மனோ இச்சையைப் பின் பற்றினான்; ஆகவே, அவனுக்கு உதாரணம் நாயைப் போன்றதாகும்; அதை நீர் விரட்டினாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது; அல்லது அதை நீர் விட்டுவிட்டாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது.” இந்த வசனம், ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிடுகிறது - அவர் மிக உயர்ந்த வழிகாட்டுதல் மற்றும் அருட் கொடையின் நிலையை அடைந்திருந்தார். ஆனால், உண்மையைத் தேடுவதற்குப் பதிலாக, தன் இச்சைகளையும் ஆசைகளை யும் பின்பற்றத் தேர்வு செய்தார். இறுதியில், அவர் அழிவிற்கும் வழிதவறலுக்கும் ஆளானார்.

அவரது நிலைக்கு உதாரணமானது ஓர் ஒட்டம் பிடிக்கும் நாயைப் போன்றது. அது துரத்தப்பட்டாலும், துரத்தப்படவில்லையா னாலும், எப்போதும் நாக்கை வெளியே தொங்கவிட்டபடியே இருக்கும்.அதுபோல அந்த மனிதரும் பாவத்திலிருந்து திரும்பாது, எப்போதும் ஒரே நிலையில் உள்ளார்.

“இப்னு ஜுரைஜ் (ரஹ்) கூறுகிறார்: ‘நாய் என்பது பகுத்தறிவு அற்றது. நீ அதைத் துரத்தினாலும் அது ஓட்டம் பிடிக்கும்; விட்டுவிட்டாலும் அது ஓட்டம் பிடிக்கும். அதேபோல், யார் ஹிதாயத்தை (நேர்வழியை) விட்டுவிடுகிறாரோ, அவருக்கும் உண்மை யான பகுத்தறிவு துண்டிக்கப்பட்டது ' (செயலிழந்தது).’ இமாம் அல்-குதைபி (ரஹ்) கூறுகிறார்: ‘எல்லா உயிரினங்களும் களைப்பு அல்லது தாகத்தால் மட்டுமே ஓட்டம் பிடிக்கும். ஆனால் நாய் மட்டும் விதிவிலக்கு - அது களைப்பிலும், ஓய்விலும், நோயிலும், ஆரோக்கியத்திலும், நீர் குடித்த பின்பும், தாகத்திலும் ஓட்டம் பிடிக்கும். எனவே அல்லாஹ், தன் வசனங்களைப் பொய்யா க்கியவர்களுக்கு இதை உவமையாகக் கூறினான். அவர்கள் எப்படி இருந்தாலும் - நீர் அறிவுரை கூறினாலும் அவர்கள் வழிதவறுகிறார்கள்; விட்டுவிட்டாலும் வழி தவறுகிறார்கள். இதன் பொருள்: அவர்கள் நாயைப் போன்றவர்கள் - நீர் விட்டு விட்டாலும் அது ஓட்டம் பிடிக்கும், துரத்தினாலும் ஓட்டம் பிடிக்கும். இது அல்லாஹ்வின் வசனம் போன்றது: நீங்கள் நேர்வழிக்கு அழைத்தாலும், உங்களை அவர்கள் பின்பற்றமாட்டார்கள்; நீங்கள் அவர்களை அழைப்பதும் அல்லது (அழை யாது) வாய் மூடியிருப்பதும் உங்களுக்குச் சமமேயாகும். [திருக்குர்ஆன், அத்தியாயம்:7, வசனம்:193].

அல்-ஜவ்ஹரி (ரஹ்) கூறுகிறார்: 'நாயின் -லஹத்- (ஓட்டம் பிடித்தல்) என்பது களைப்பு அல்லது தாகத்தால் நாக்கை வெளியே தூக்குவதாகும். இதேபோல் மனிதனும் களைப்படைந்தால் இவ்வாறு செய்கிறான். 'நீ அதைத் துரத்தினால் அது ஓட்டம் பிடிக்கும்' எனும் வசனத்தின் பொருள்: நீ நாயைத் துரத்தினால், அது குரைத்துக்கொண்டு ஓடிவிடும். நீ விட்டுவிட்டால், அது உன்னை நோக்கி ஓடிவந்து குரைக்கும். இதனால் அது உன்னிடம் வரும்போதும், உன்னிடமிருந்து ஓடும்போதும் தன்னைக் களைப்படையச் செய்துகொள்கிறது. இந்தநிலையில், தாகத்தின் போது நாக்கை வெளியே தூக்குவது போன்ற நிலைக்கு உள்ளாகிறது’.

### முடிவுரை

குர்ஆனின் உவமைகள் மற்றும் சமூக சீர்திருத்தத்தில் அவற்றின் முக்கிய பங்கு" என்ற இந்த பகுப்பாய்வு ஆய்வின் முடிவா னது, குர்ஆனின் உவமைகள் என்பது

அறநெறி மற்றும் சமூகக் கோட்பாடுகளை மனிதனின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்து வதற்கும், நடத்தையை நல்வழி நடத்துவதற் கும், சமூகத்தில் மனிதாபிமான மதிப்புகளை வலுப்படுத்துவதற்கும் சக்திவாய்ந்த கருவிகள் என்பதை நாம் கூறலாம். இந்த உவமைகள் வெறும் கதைகளோ அல்லது சாதாரண உதாரணங்களோ அல்ல. மாறாக, இவை முழுமையான கல்விக் கருவிகளாகும் - நீதி, சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சமூகத்தைக் கட்டியெழுப் பும் ஆழமான பாடங்களைக் கொண்டவை.

குர்ஆன் கரீம், உவமைகள் மூலம் தனிநபர் கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலாவை நம்பிக்கை கொள்வதன் முக்கியத்துவத்தையும் தெளிவாக் கியுள்ளது. மேலும் இது இஸ்லாமிய மதிப்பு கள் வழியாக தனிநபர் மற்றும் சமூகத்திற்கி டையிலான உறவுகளை விளக்குகிறது. இந்த மதிப்புகள் சமூக ஒற்றுமையை வலுப்படுத்து கின்றன, மோதல்களைக் குறைக்கின்றன மற்றும் நீதியின் கொள்கையை ஆதரிக்கின்றன. இந்த உவமைகள் மனதைத் தூண்டுவதற்கும், கருத்துகள் மற்றும் பொருள்களை இதயங் களில் பதிக்கவும் உதவுகின்றன. இது சமூக சீர்திருத்த செயல்முறையை வலுப்படுத்து கிறது மற்றும் மிகவும் சமச்சீரான மற்றும் நியாயமான சமூகத்தை உருவாக்க உதவுகிறது.

சுருக்கமாக, குர்ஆனிய உவமைகளின் பங்கு சமூக சீர்திருத்தத்தில் மதப் புரிதலை மட்டுமே வலுப்படுத்துவதில் மட்டுப்படுவ தில்லை. மாறாக, இது அன்றாட வாழ்வின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது தனிநபர்களை அவர்களின் சமூக, பொருளா தார மற்றும் கலாச்சார நடத்தையை மேம்படுத்த ஊக்குவிக்கிறது.

## அடிக்குறிப்பு

1. திருக்குர்ஆன், அத்தியாயம்:22, வசனம்:73.
2. திருக்குர்ஆன், அத்தியாயம்:16, வசனம்:112.
3. திருக்குர்ஆன், அத்தியாயம்:14, வசனம்:25.
4. திருக்குர்ஆன், அத்தியாயம்:16, வசனம்:75.
5. திருக்குர்ஆன், அத்தியாயம்:2, வசனம்:26.
6. திருக்குர்ஆன், அத்தியாயம்:14, வசனம்:24-26.
7. இமாம் அந்நவவி (ரஹ்), ரியாளுஸ் ஸாலிஹீன், சாஜிதாபுக் சென்டர், ஹதீஸ் எண்: 995, பக்கம்: 443.
8. திருக்குறள்100: அதிகாரம்-10–இனியவை கூறல்.
9. திருக்குர்ஆன், அத்தியாயம்:2, வசனம்:261.
10. திருக்குர்ஆன், அத்தியாயம்:2, வசனம்:261.
11. அல்ஹாபிழ் ஷம்சுதீன் அல்குர்துபி, அல்ஜாமிவு லி அஹ்காமில் குர்ஆன், நான்காவது பாகம், பக்கம்: 318
12. திருக்குர்ஆன், அத்தியாயம்:13, வசனம்:17.
13. ஜலாலுதீன் அஸ் ஸுயூத்தி, துர்ருல் மன்சூர் பீ தப்சீரி பில் மஸுரி, எட்டாம் பாகம், பக்கம்:419.
14. அல் ஹுசைன் இப்னு மஸுஊத் அல் பகவி, அத்தப்ஸீர் அல் பகவி, பதிமூன்றாவது பாகம், பக்கம்: 309.
15. திருக்குர்ஆன், அத்தியாயம்:18, வசனம்:45.
16. அல்ஹாபிழ் ஷம்சுதீன் அல்குர்துபி, அல்ஜாமிவு லி அஹ்காமில் குர்ஆன், பதிமூன்றாம் பாகம், பக்கம்: 289.
17. திருக்குர்ஆன், அத்தியாயம்:7, வசனம்:175, 176.
18. அல்ஹாபிழ் ஷம்சுதீன் அல்குர்துபி, அல்ஜாமிவு லி அஹ்காமில் குர்ஆன், ஒன்பதாவது பாகம், பக்கம்: 387,388.

**உச்சாதுணை நூல்கள்**

1. திருக்குர்ஆன்.
2. இப்னு கஸீர், தப்ஸீர் அல் குர்ஆனில் அழீம், தாருதய்யிபா 1999.
3. இமாம் அந்நவவி (ரஹ்), ரியாளுஸ் ஸாலிஹீன், சாஜிதாபுக் சென்டர்.
4. அல்ஹாபிழ் ஷம்சுதீன் அல்குர்துபி, அல்ஜாமிவு லி அஹ்காமில் குர்ஆன்.
5. அல் ஹுசைன் இப்னு மஸுஊத் அல் பகவி, அத்தப்ஸீர் அல் பகவி.
6. ஜலாலுதீன் அஸ் ஸுயூத்தி, துர்ருல் மன்சூர் பீ தஃப்சீரி ஃபில் மஃஸுரி.
7. ஃபக்ருதீன் அர் ராஜி, மஃபாதீஹுல் கைபி, தாருல் பிக்ர்,1981.